தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 136/ந/2024

நாள். 25 .10.2024

திருமதி.S.M.அலமேலு,
நச்சாந்துப்பட்டி, புதுக்கோட்டை. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
புதுக்கோட்டை நகராட்சி – எதிர்மனுதாரர்

புதுக்கோட்டை மாவட்டம், நச்சாந்துப்பட்டி, சிவன்கோவில் தெரு, கதவு எண்.1/26B என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி.S.M.அலமேலு என்பவரின் 23.11.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.11.2023 அன்று பெறப்பட்டு, 136/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

புதுக்கோட்டை மாவட்டம், நச்சாந்துப்பட்டி, சிவன்கோவில் தெரு, கதவு எண்.1/26B என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி.S.M.அலமேலு என்பவர் தனது 23.11.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

எனது புதுக்கோட்டை வீட்டில் T.S.No.708, வடக்கு 2–ஆம் வீதி, பிருந்தாவனம், புதுக்கோட்டை என்ற முகவரியில் வாடகைக்கு குடித்தனம் நடத்தி வரும் ராணி என்பவர் வீட்டு உரிமையாளரான எனது அனுமதி இல்லாமல் அத்துமீறி சுகாதார சீர்கேடு மற்றும் நோய்த்தொற்று ஏற்படுத்தும் வகையில் மாடுகள், மாட்டுப்பண்ணையை, சாணிக்குவியல்களை குமித்து வீட்டில் வைத்துக்கொண்டும், உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் மாடுகளை ரோட்டில் விரட்டி விடுவதால் அது வண்டியில் செல்வோரை முட்ட வருகிறது. வண்டியில் செல்லும் பொதுமக்கள் கீழே விழ வாய்ப்பு உள்ளது என்றும் இதனால் பொதுமக்கள் காயம் ஏற்பட, உயிரிழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும் மாடுகளை அகற்றக்கோரியும், நகராட்சி ஆணையர், புதுக்கோட்டை நகராட்சி அவர்களுக்கு போட்டோ ஆதாரத்துடன் நடவடிக்கை எடுக்கக்கோரி எனது புகார் மனுவை 30.05.2023ம் தேதியன்று பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்தேன். எனது புகார் மனுவை 01.06.2023ம் தேதியன்று பெற்றுக்கொண்ட நகராட்சி ஆணையர், புதுக்கோட்டை நகராட்சி அவர்கள் மூன்று தினங்களுக்குள் ஒப்புகைசீட்டு எதுவும் வழங்கவில்லை. அதன் பிறகு 30 நாட்களுக்குள் எனது புகார் மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் விவரத்தைகூட எனக்கு தெரிவிக்கவில்லை.

பிறகு எனது 30.06.2023ம் தேதியிட்ட RTI மனுவை பொதுத்தகவல் அலுவலர், புதுக்கோட்டை நகராட்சி அவர்களுக்கு பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்தேன். அதை அவர் 03.07.2023ம் தேதியன்று

பெற்றுக்கொண்டார். அதன் பிறகும் நடவடிக்கை எடுக்கவில்லை. பதிலும் இல்லை. பிறகு RTI Act 2005–ன்படி நகராட்சி ஆணையருக்கு 02.08.2023 அன்று முதல் மேல்முறையீடு செய்தேன். அதை 03.08.2023ல் நகராட்சி ஆணையர் பெற்றுக்கொண்டார். மேல்முறையீடு செய்த பிறகு முன்தேதியிட்ட கடிதத்தை சாதாரண தபாலில் பொதுத்தகவல் அலுவலர், புதுக்கோட்டை நகராட்சி அவர்கள் எனக்கு அனுப்பி வைத்தார்.

அதில் அவர் கூறிய பதில் பொதுசுகாதார சட்டத்தின்படி ஒரு அறிவிப்பு மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் மாடுகளை வீட்டிலிருந்து அகற்ற முடியாது என்றும் மாடுகளை ரோட்டில் விரட்டி விடுவது தொடர்பாக (RTI மனுவில் கேள்வி எண்.9) எந்த பதிலும் தரவில்லை. எனது புகார் மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மீண்டும் வந்து ஆய்வு செய்யாமல் அப்படியே கிடப்பில் போட்டு விட்டனர். ராணி மீண்டும் தொடர்ந்து சாணிக்குவியலை குவித்து வைத்துக்கொண்டும், ரோட்டில் தொடர்ந்து மாடுகளை விரட்டி விடுகிறார். ராணியின் மகன் மனோஜ் மாடுகளை ரோட்டில் விரட்டி செல்கிறார். மாடுகள் உள்ளதை, சாணிக்குவியல் உள்ளதை, மாடுகளை ரோட்டில் விரட்டுவதை, பொதுமக்கள் வண்டியில் செல்வோர் தடுமாறுவதை போட்டோ, வீடியோ ஆதாரத்துடன்இணைத்துள்ளார்.

புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் அவர்களுக்கு 22.08.2023ம் தேதியன்று 10 தினங்கள் கொண்ட சட்ட அறிவிப்பு கடிதம் அனுப்பினேன். அதை 23.08.2023–ல் நகராட்சி ஆணையர் பெற்றுக்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ராணியின் மகன் மனோஜ் மாடுகளை தொடர்ந்து ரோட்டில் அடித்து விரட்டி செல்கிறார்.

புதுக்கோட்டை நகராட்சி அவர்கள் எனக்கு 07.09.2023ம் தேதியன்று எழுதிய மேல்முறையீடு பதில் கடிதத்தில் எனது RTI மனு கோரிக்கை வடிவில் உள்ளது என்றும், மாடுகள் தனியார் இடத்தில் இருப்பதால் நடவடிக்கை எடுக்க முடியாது என்றும், சாணிக்குவியல் பொது சுகாதாரச் சீர்கேடு பற்றி பதில் அளிக்காமல், ரோட்டில் பொது இடத்திற்கு மாடுகளை விரட்டி விடுவது பற்றி பதில் அளிக்காமல் உள்ளார். புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் அவர்கள் பொறுப்பு இல்லாமல், பொதுமக்கள் மீது அக்கறை இல்லாமல் மெத்தனமாக செயல்படுகிறார்.

புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் அவர்கள் பொறுப்பாக, பொதுமக்கள் மீது அக்கறையுடன் செயல்படாமல் கடமை தவறி செயல்படுகிறார். நான் புகார்களை நகராட்சி ஆணையர், புதுக்கோட்டை நகராட்சி அவர்களுக்கே அனுப்பியுள்ளேன். காரணம் அவர்தான் நகராட்சிக்கு Presiding Officer ஆவார். அவரே முதன்மை எதிர்மனுதாரர் ஆவார். அவர் தவறுக்கு தான் பொறுப்பில்லை என்று வேறு யாரையும் கைகாட்டலாம். எனது குற்றச்சாட்டுக்கு தலைமைப்பொறுப்பு அவர்தான்.

2, 3, 4ஆம் எதிர்மனுதாரர்களான மேலாளர், சுகாதார அதிகாரி, துப்புரவு அலுவலர், புதுக்கோட்டை நகராட்சி ஆகியோர் எனது புகாரை களையப்பொறுப்பானவர்கள். எனவே அவர்களுக்கு எதிராகவும் புகார் செய்துள்ளேன். எனது புகாரின் அடிப்படையில் ராணியின் மகன் மனோஜ் மாடுகளை அடித்து ரோட்டில் விரட்டி விடுவதால் பொதுமக்கள் நேரடியாக பாதிக்கப்படுவதால் அவசியம் ஏற்பட்டால் ராணி, க/பெ. முருகேசன், 708, வடக்கு 2–ம் வீதி, பிருந்தாவனம், புதுக்கோட்டை அவர்களுக்கு சம்மன் அனுப்பியும் விசாரிக்கலாம். ஆகவே தாங்கள் சமூகம் கருணை கூர்ந்து இந்தப்புகாரில் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக தக்க நடவடிக்கை எடுத்து நீதி வழங்க வேண்டுகிறேன் என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு குறித்து புதுக்கோட்டை நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 12.01.2024ம் நாளிட்ட அறிவிப்பின் மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. புதுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் தனது 29.01.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பிருந்தாவனம் T.S.No.708 வடக்கு 2ம் வீதி முகவரியில் வசிக்கும் மனுதாரர் திருமதி. S.M. அலமேலு என்பவரின் புகார் மனுவின்படி திருமதி.ராணி என்பவருக்கு கடந்த 25.07.2023 ம் தேதி பொது சுகாதாரத்திற்கு சீர்கேடு விளைவிக்கும் வண்ணம் தாங்கள் மாடுகளை அனுமதியின்றி வளர்த்து வருகிறீர்கள். ஆகையால் இவ்வறிவிப்பு கிடைக்கபெற்ற மூன்று தினங்களுக்குள் மாடுகளை அப்புறப்படுத்திகொள்ளவும், சுகாதார சீர்கேடுகளை சரி செய்யவும் என தெரிவித்து அறிவிப்பு வழங்கப்பட்டது. அதன்படி திருமதி. ராணி என்பவர் இவ்வறிவிப்பினைபெற்றுக்கொண்டு தான் வளர்த்து வந்த மாடுகளில் 1 மாடு மட்டும் வைத்துக்கொண்டு மற்றவற்றை விற்பனை செய்து விட்டார் என்பதை பணிந்து தெரிவித்துள்ளார். மேலும் அவரது வீட்டின் பின்புறம் சிமெண்ட் தளம் அமைத்து சுகாதாரமான முறையில் வளர்த்து வருகிறார். சாணக்குவியல்கள் ஏதும் இல்லை. இதுவரையிலும் இது தொடர்பாக அப்பகுதி பொதுமக்களிடமிருந்து எவ்வித புகாரும் பெறப்படவில்லை.

மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச்சட்ட மனு தொடர்பாக விசாரணை செய்யப்பட்டதில் திருமதி.S.M.அலமேலு என்பவருக்கு சொந்தமான வீட்டினை திருமதி.ராணி என்பவருக்கு வாடகைக்கு விட சம்மதித்து கடந்த 15.09.2022–ல் முன்பணம் ரூ.25,000/– என்றும் மாதவாடகை ரூ.5800/– என்றும் நிச்சயித்து தக்க சாட்சிகள் முன்னிலையில் எழுத்து பூர்வமான வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு ராணி என்பவர் குடியிருந்து வந்துள்ளார். அவரை மூன்று மாத காலத்திற்குள் வீட்டை காலி செய்திட கட்டாயப்படுத்தியுள்ளார்.

இதனால் திருமதி.ராணி என்பவர் மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் புதுக்கோட்டையில் தன்னை சட்டத்துக்கு முரணான வழிகளில் வெளியேற்ற கூடாதென நிரந்தர தடையாணைப் பரிகாரம் வழங்கவும் மற்றும் இந்த வழக்கு மீதான விசாரணை முடியும் வரை வீட்டை காலி செய்ய கூடாதெனவும் கூறிஅசல் வழக்கு எண்.9/2023 வ.வி.எண்.81/2023–ல் வழக்கு தொடுத்துள்ளார். வழக்கு நடைபெற்று வருகிறது என்பதை தெரிவித்துள்ளார்.

திருமதி.S.M.அலமேலு என்பவர் மேற்படி வழக்கு நடந்து வரும் வேலையில் நகராட்சி அலுவலர்களை கொண்டு அவரை காலி செய்திட வைக்கும் நோக்கில் புகார் மனுக்கள் மற்றும் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன்படி தொடர்ந்து தகவல் கேட்டு வற்புறுத்தி வருகிறார். இவர் நகராட்சி பணியாளர்களை தவறான வழிகாட்டுதலின்படி பணி செய்ய நிர்பந்திக்கிறார். இது முழுக்க தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக கூறப்படும் புகாராகும். மேலும் இவ்வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. எதிர்வரும் 04.03.2024–ல் வழக்கு விசாரணை நடைபெற உள்ளது என்பதையும் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் ஆகியோரை 08.10.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 13.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. விசாரணைக்கு வரும்போது புகார் மனு தொடர்பான முழு விவர அறிக்கையுடன் வருமாறு ஆணையாளர் அறிவுறுத்தப்பட்டார்.

5. மனுதாரர் திருமதி.S.M.அலமேலு 08.10.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகவில்லை. மனுதாரர் தன்னுடைய 23.11.2023 நாளிட்ட புகாரில் தன்னுடய வீட்டில் வாடகைக்கு குடித்தனம் நடத்தி வரும் திருமதி. ராணி என்பவர் வீட்டு உரிமையாளரான தன்னுடைய அனுமதி இல்லாமல் அத்துமீறி சுகாதார சீர்கேடு மற்றும் நோய்த்தொற்று ஏற்படுத்தும் வகையில் மாட்டுப்பண்ணையை வைத்து,

சாணிக்குவியல்களை குவித்து வைத்துக்கொண்டும், மாடுகளை ரோட்டில் விரட்டி விட்டும் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதாக் தெரிவித்து நடவடிக்கை எடுக்கும்படி கோரியுள்ளார்.

6. நகராட்சி ஆணையாளர் சார்பா சுகாதார அலுவலர் 08.10.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட விவரம் தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் புகார் மனுவின் பேரில் அவரது வீட்டில் குடியிருக்கும் திருமதி. ராணி என்பவருக்கு கடந்த 25.07.2023 அன்று பொது சுகாதாரத்திற்கு சீர்கேடு விளைவிக்கும் வகையில் மாடுகளை அனுமதியின்றி வளர்த்து வருவதாக புகார் வரப்பெற்றதால், நகராட்சியின் அறிவிப்பு கிடைக்கபெற்ற மூன்று தினங்களுக்குள் மாடுகளை அப்புறப்படுத்திக்கொள்ளவும் மற்றும் சுகதார சீர்கேடுகளை சரிசெய்யவும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி திருமதி.ராணி என்பவர் மேற்கண்ட அறிவிப்பினை பெற்றுக்கொண்டு தான் வளர்த்து வந்த மாடுகளில் 1 மாடு மட்டும் வைத்துக்கொண்டு மற்றவற்றை விற்பனை செய்துவிட்டார். மேலும் அவரது வீட்டினை நேரடியாக ஆய்வு செய்ததில் வீட்டின் பின்புறம் சிமெண்ட் தளம் அமைத்து சுகாதாரமான முறையில் வளர்த்து வருகிறார். சாணக்குவியல்கள் ஏதுமில்லை என்பதும் தெரிய வருகிறது. இதுவரையிலும் இதுதொடர்பாக அப்பகுதி பொதுமக்களிடமிருந்து எவ்வித புகாரும் பெறப்படவில்லை.

திருமதி.அலமேலு என்பவருக்கு சொந்தமான வீட்டினை திருமதி.ராணி என்பவருக்கு வாடகைக்கு விட சம்மதித்து கடந்த 15.09.2022–ல் முன்பணம் ரூ.25000/– என்றும் மாதவாடகை ரூ.5800/– என்றும் நிச்சயித்து தக்க சாட்சிகள் முன்னிலையில் எழுத்துபூர்வமாக வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு குடியிருந்து வந்துள்ளார். அவரை மூன்று மாத காலத்திற்குள் வீட்டை காலி செய்திட கட்டாயப்படுத்தியுள்ளனர். இதனால் திருமதி.ராணி மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் புதுக்கோட்டையில் தன்னை சட்டத்துக்கு முரணான வழிகளில் வெளியேற்ற கூடாதென நிரந்தர தடையாணைப்பரிகாரம் வழங்கவும் இந்த வழக்கு மீதான விசாரணை முடியும் வரை வீட்டை காலி செய்ய கூடாதெனவும் கூறி அசல் வழக்கு எண்.9/2023 வ.வி.எண்.81/2023ல் வழக்கு தொடர்ந்து வழக்கு நடைபெற்று வருகிறது என்பதும் தெரிய வருகிறது. மேற்கண்ட விவரங்களை இம்முறைமன்ற நடுவத்தில் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

மேலும் எனது 29.01.2024 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்களை மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் புதுக்கோட்டை நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள், ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரரின் வீட்டில் வாடகைக்கு குடித்தனம் நடத்தி வரும் திருமதி.ராணி என்பவர் சுகாதார சீர்கேடுகளை விளைவிக்கும் வகையில் மாடுகளை வளர்த்து வருவதாகவும், உயிருக்கு ஆபத்து ஏற்படும் வண்ணம் மாடுகளை ரோட்டில் விரட்டி விடுவதாகவும், புதுக்கோட்டை நகராட்சிக்கு புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்துள்ளார். இது குறித்து நகராட்சி ஆணையாளர், மேற்கண்ட புகார் தொடர்பாக அறிவிப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து திருமதி.ராணி தான் வளர்த்து வந்த மாடுகளில் 1 மாடு மட்டும் வைத்துக்கொண்டு மற்றவற்றை விற்பனை செய்துவிட்டார் என்றும் மேலும் அவரது வீட்டின் பின்புறம் சிமெண்ட் தளம் அமைத்து சுகாதாரமான முறையில் வளர்த்து

வருகிறார் எனவும், சாணக்குவியல்கள் ஏதும் இல்லை என்றும், மேலும் இதுவரையில் அப்பகுதி பொதுமக்களிடமிருந்து இது தொடர்பாக எந்தவித புகாரும் பெறப்படவில்லை என்று நகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் மனுதாரர் தனது வீட்டை திருமதி.ராணி என்பவருக்கு வாடகைக்கு விட சம்மதித்து கடந்த 15.09.2022–ல் முன்பணம் ரூ.25,000/– என்றும் மாத வாடகை ரூ.5800/– என்றும் நிச்சயித்து தக்க சாட்சிகள் முன்னிலையில் எழுத்து பூர்வமான வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார் என்பதும் ஆணையரின் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. இந்நிலையில் மனுதாரர் திருமதி.ராணி என்பவரை மூன்று மாத காலத்திற்குள் வீட்டை காலி செய்திட கட்டாயப்படுத்தியுள்ளார் எனவும் எனவே திருமதி.ராணி என்பவர் மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், புதுக்கோட்டையில் தன்னை சட்டத்துக்கு முரணான வழிகளில் வெளியேற்ற கூடாதென நிரந்தர தடையாணைப்பரிகாரம் வழங்கவும் மற்றும் இந்த வழக்கு மீதான விசாரணை முடியும் வரை வீட்டை காலி செய்யக்கூடாதெனவும் கூறி அசல் வழக்கு எண்.9/2023 வ.வி.எண்.81/2023–ல் வழக்கு தொடுத்து, அந்த வழக்கு நடைபெற்று வருகிறதென்றும் வழக்கு 04.03.2024–ல் வழக்கு விசாரணை நடைபெற உள்ளது எனவும் மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை புதுக்கோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

இந்நிலையில் திருமதி.ராணி ஒரு மாட்டை தவிர பிற மாடுகளை விற்று விட்டார் என்றும், அந்தப்பகுதி மக்களிடமிருந்து எந்தவித புகாரும் எழவில்லை என்று நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் நகராட்சி சுகாதார அலுவலரின் வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதாலும், அது தொடர்பான புகைப்பட ஆதாரங்களை சமர்ப்பித்திருப்பதாலும், திருமதி. ராணி வீட்டை காலி செய்வது தொடர்பான அசல் வழக்கு எண். 8/2023 புதுக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாலும், இவ்வழக்கினை முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 25–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி.S.M.அலமேலு,
க/பெ. K.சோமசுந்தரம்,
1/26B. சிவன்கோவில் தெரு,
நச்சாந்துப்பட்டி (அஞ்சல்)
புதுக்கோட்டை – 622 404.

2. நகராட்சி ஆணையர்,
புதுக்கோட்டை நகராட்சி,
புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – **600 028.**

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)